


# உடற்கல்விக்கு ஒரு உன்னதமான மைதானம்

ஒய்.எம்.சி.ஏ.



**"பழக்கத்தின் காரணமாக, நாம் ஒவ்வொரு நாளும் நமது வாழ்வின் பல மகத்துவங்களைக் கண்மூடித்தனமாக கடந்து செல்கிறோம்".**
சென்னையின் துடிப்பான இதயப் பகுதியான நந்தனத்தில் உள்ள, பரந்த ஒய். எம். சி. ஏ. வளாகத்தில், நம்மில் பலர், நிகழ்வுகள் மற்றும் கச்சேரிகளைப் பார்த்திருக்கிறோம் அல்லது பங்கேற்றுள்ளோம். ஆயினும்கூட, அதன் பின்னணியில் உள்ள மதிப்புமிக்க நிறுவனத்தையோ அல்லது அதன் குறிப்பிடத்தக்க வெற்றிக்கு உந்துவிசையாக இருக்கும் முக்கிய நோக்கம் மற்றும் தொலைநோக்குப் பார்வையைப் பற்றியோ வெகு சிலரே அறிவார்கள். நாம் புகழ்பெற்ற "ஒய். எம். சி. ஏ. உடற்கல்வி கல்லூரி" பற்றித்தான் பேசுகிறோம். உயர்கல்வி திறன் கொண்ட உடற்கல்வித் தலைவர்களைத் தயாரிப்பதில், இந்த நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பைக் கண்டறிவது, நம்மை உண்மையிலேயே ஊக்குவிக்கிறது. இந்த நிறுவனம், உடல் தகுதி, சமூக ஈடுபாடு மற்றும் உணர்ச்சி ரீதியாக நெகிழ்திறன் கொண்ட நபர்களை வளர்ப்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்துகிறது. பெருமை மிக்க இந்த நிறுவனத்தின் முதல்வர் திரு ஜான்சன் பிரேம்குமார், அதை பற்றிப் பேசும்போது பல மதிப்புமிக்க உள்நோக்குச் சிறப்புகளை கூறுகிறார். இந்த நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க பயணத்தையும், சென்னையில் விளையாட்டுகளை வளர்ப்பதில் அதன் உறுதியான அர்ப்பணிப்பையும் விவரிக்கிறார்.

**"ஆச்சரியமான தருணங்களிலிருந்தும், ஆராய்வதற்கான தைரியத்திலிருந்தும் பெரிய விஷயங்கள் பிறக்கின்றன".**

ஒய். எம். சி. ஏ. இயக்கத்தின் எழுச்சியூட்டும் தோற்றம் 180 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்டது. ஜார்ஜ் வில்லியம்ஸ் என்பவரால் நிறுவப்பட்ட இது, பிரார்த்தனை மற்றும் தோழமைக்காகக் கூடிய ஒரு சிறிய நண்பர்கள் குழுவாகத் தொடங்கியது. இந்த மிதமான தொடக்கத்திலிருந்து, ஒய். எம். சி. ஏ. பல ஆண்டுகளாக ஒரு முக்கிய சர்வதேச அமைப்பாக வளர்ந்துள்ளது.
1920 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க நாட்டின் மாசசூசெட்ஸ் மாநிலத்தில் ஸ்பிரிங்ஃபீல்ட் நகரத்தில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டதன் மூலம் ஒய். எம். சி. ஏ. உடற்கல்வியில் நுழைந்தது. உலகெங்கிலும் உடற்கல்வியை மேம்படுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையுடன், உடற்கல்வியின் அறிவியல் கொள்கைகளில் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக இது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

**"ஒரு சிறந்த எதிர்காலத்தைக் கற்பனை செய்யத் துணிந்தவர்கள் கடமையின் அழைப்பை தைரியத்துடன் ஏற்றுக்கொள்கிறார்கள்".**
ஒய். எம். சி. ஏ. சென்னை வரலாற்றில் ஒரு முக்கிய நபர் ஒய். எம். சி. ஏ. உடற்கல்வி கல்லூரியின் நிறுவனர் திரு ஹாரி க்ரோ பக் ஆவார். அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் பிறந்த பக், உடற்கல்வியில் பட்டம் பெற்றார் மற்றும் கால்பந்து மற்றும் பேஸ்பால் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு அணிகளுக்கு பயிற்சியளிக்கும் பின்னணியைக் கொண்டிருந்தார். உலகெங்கிலும், குறிப்பாக இந்தியாவில் உடற்கல்வித் திட்டத்தை நிறுவ வேண்டும் என்று ஸ்பிரிங்ஃபீல்ட் ஒய். எம். சி. ஏ. விடுத்த அழைப்புக்கு பதிலளிக்கும் விதமாக, அவரும் அவரது மனைவி மேரி பக்கும் நம் நாட்டிற்கு ஒரு மாற்றத்தை உருவாக்கும் பயணத்தைத் தொடங்கினர்.

உடற்கல்வியின் மீதான ஆர்வத்தால் உந்தப்பட்ட ஹாரி க்ரோ பக், இந்தியாவில் ஒரு புதுமையான திட்டத்தை நிறுவுவதில் உறுதியாக இருந்தார். இந்தியாவுக்கான தனது பயணத்தில் அவர் பல சவால்களை எதிர்கொண்டார். 180 நாட்களுக்கு மேல் கப்பலில் பயணம் செய்து மெட்ராஸ் (சென்னை) துறைமுகத்தில் தரையிறங்கினார், ஆனால் அவர் பின்வாங்கவில்லை. சென்னைக்கு வந்தவுடன், திரு பக் சென்னை ஒய். எம். சி. ஏ. வில் ஒரு உடற்பயிற்சி திட்டத்தை தொடங்கினார். இதுவே, இறுதியில் ஒரு விரிவான உடற்கல்வி முயற்சியாக உருவானது.

**"ஆயிரம் மைல்களின் பயணம் ஒரு காலடி வைப்பில் தொடங்குகிறது".**
1920 ஆகஸ்டு மாதத்தில், அதிகாரப்பூர்வமாக, ஒய். எம். சி. ஏ. உடற்கல்வி பள்ளி, ஐந்து ஆர்வமுள்ள மாணவர்களுடன் நிறுவப்பட்டது. உடற்கல்வி கோட்பாடு வகுப்புகள், சென்னை ஒய். எம். சி. ஏ. எஸ்ப்ளேனட் கிளையிலும், நடைமுறை பயிற்சிகள், கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள ஒய். எம். சி. ஏ. ஆடவர் நகர பள்ளியிலும் நடைபெற்றன. படிப்படியாக அடுத்த இரண்டு ஆண்டுகளில், பள்ளியின் வளர்ச்சி, ராயப்பேட்டையில் உள்ள ஒரு பெரிய இடத்திற்கு மாற்றப்பட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது. அந்த இடத்திலிருந்து, கல்லூரி செயல்படத் தொடங்கியது.

**"சில சிறப்பு மைல்கற்கள், ஒரு நிறுவனத்தின் சாதனைகளை குறிப்பது மட்டுமல்லாமல், அதன் வளர்ச்சியின் கதைகளையும் வைத்திருக்கின்றன".**
1924 ஆம் ஆண்டில் சர்வதேச ஒலிம்பிக் குழு, பாரிஸ் ஒலிம்பிக்கிற்கு ஒரு அணியை அனுப்ப இந்தியாவை அழைத்தபோது, இந்த பள்ளியின் வரலாற்றில் ஒரு மிக முக்கியமான மைல்கல் ஏற்பட்டது. இந்த மதிப்புமிக்க நிகழ்வுக்கு, உடற்கல்விப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களைத் தயார்படுத்தும் மகத்தான பணி, திரு. ஹாரி க்ரோ பக்கிடம் ஒப்படைக்கப்பட்டது. பெருமையுடன், திரு. பக் இந்திய ஒலிம்பிக் அணியின் முதல் பயிற்சியாளராகவும் மேலாளராகவும் ஆனார். அவர், விளையாட்டு வீரர்களை முதன் முறையாக, இந்த ஒலிம்பிக் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பாரிஸுக்கு அழைத்துச் சென்றார்.
இது உண்மையிலேயே இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனைத் தருணம்.
மிகக் குறைந்த வசதிகள் மற்றும் ஏராளமான சவால்கள் இருந்தபோதிலும், திரு பக், அவரின் மாணவர்களுக்கு சர்வதேச அரங்கில் போட்டியிட விடாமுயற்சியுடன் பயிற்சி அளித்தார். இது இந்திய விளையாட்டு வளர்ச்சியில் ஒரு அழியாத அடையாளத்தை விட்டுச் சென்றதுடன், ஒரு சிறந்த நிறுவனத்தின் பரிணாம வளர்ச்சிக்கு வழி வகுத்தது.

**"ஒரு சொத்தின் மதிப்பு அது இருப்பதால் மட்டும் வருவது அல்ல. ஆனால் அதன் உண்மையான மதிப்பு, நீங்கள் அதை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்து தீர்மானிக்கப் படுகிறது!"**
1932 ஆம் ஆண்டில், சென்னை அரசு ஒய். எம். சி. ஏ-வின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்தை அங்கீகரித்து, நந்தனத்தில் 63 ஏக்கர் நிலத்தை அதன் பணியை மேலும் மேம்படுத்துவதற்காக பரிசளித்தது. ஆரம்பத்தில் ஒரு வனப்பகுதியாய் இருந்த இடத்தை, திரு. பக், அதன் வளர்ச்சியை கற்பனை செய்து, பல்வேறு வசதிகளை உருவாக்கி, முறையாக செயல்படுத்தினார். இதன் விளைவாக, பல ஆண்டு காலத்தில், பல விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு திடல்கள், வளாகங்கள், விடுதிகள், ஆய்வகங்கள், நூலகங்கள் மற்றும் பல்துறை வள மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
திரு. பிரேம்குமார் ஒய்எம்சிஏவின் உடற்கல்வித் திட்டத்தின் தொலைநோக்கு தாக்கத்தை வலியுறுத்தினார்.

ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தை நிறுவுதல், உடற்கல்வியில் ஆசிரியர்கள் மற்றும் தலைவர்களை வடிவமைத்தல் மற்றும் சீர்ப்படுத்துதல் ஆகியவற்றிற்கு அப்பால், உடல், மன, தார்மீக மற்றும் ஆன்மீக விழுமியங்களை வளர்ப்பதில் சமமான கவனம் மற்றும் ஆழ்ந்த அர்ப்பணிப்பு இங்கு உள்ளது.
இந்த முழுமையான அணுகுமுறையால், ஒய். எம். சி. ஏ. தன் பேணிய குறிக்கோளான 'நிறைவான வாழ்க்கை!' என்பதை உள்ளடக்கிய, தேசத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கக்கூடிய, சிறந்த குடிமக்களை வளர்க்க முயல்கிறது.

**"துடிப்பான பாடத்திட்டம், அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் மற்றும் ஈடுபாடு கொண்ட மாணவர்கள் இணைந்து சிறந்த பாரம்பரியத்தை உருவாக்குகிறார்கள்"**
ஒய். எம். சி. ஏ. சென்னை உடற்கூறியல், உடலியல், மனித உடல் இயக்கியல், உயிரியக்கவியல், மீநுண் (நானோ) தொழில்நுட்பம் மற்றும்

விளையாட்டு உளவியல் போன்ற பரந்த அளவிலான பாடங்களை உள்ளடக்கிய, எப்போதும் மாறும் ஒரு பாடத்திட்டத்தை வழங்குகிறது. உடற்கல்வித் துறையின் பல அம்சங்களில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய அறிவியல்களைப் புரிந்துகொள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.
இந்த நிறுவனம் உடற்கல்வியில் பட்டயப் படிப்பு (டிப்ளமோ), உடற்கல்வி மற்றும் அறிவியல் இளங்கலை பட்டம் (பிபிஇஎஸ்), முதுகலை உடற்கல்வி பட்டம் (எம்பிஎட்) மற்றும் முனைவர் (பிஎச்டி) பட்டம் ஆகியவற்றை வழங்குகிறது. இவை அனைத்தும், ஆசிரியர் கல்விக்கான தேசிய கவுன்சிலால் (NCTE) அங்கீகரிக்கப்பட்டவை ஆகும். மாணவர் சேர்க்கை முறை, உடல் சோதனைகள் உட்பட கடுமையான தேர்வு சோதனைகளை உள்ளடக்கியது ஆகும். இது, மிகவும் அர்ப்பணிப்பு மற்றும் திறமையான மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவதை உறுதி செய்கிறது. மேலும், மக்களிடம் அதிக பிரபலமான, உடற்பயிற்சி முதுகலை (எம். எஸ்சி) போன்ற மாலை படிப்புகளும் இங்கு கிடைக்கின்றன.
இந்த பள்ளியில் 500-600 உறைவிட மாணவர்கள் உள்ளனர் மற்றும் இப்பள்ளி, ஆரோக்கியமான பாலின விகிதத்தைக் கொண்டுள்ளது.
"எங்கள் ஆசிரியர்கள், முக்கியமாக எங்கள் பள்ளியின் முன்னாள் மாணவர்கள், அடுத்த தலைமுறை உடற்கல்வித் தலைவர்களை வளர்ப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ளனர்" என்று திரு. பிரேம்குமார் பெருமையுடன் கூறுகிறார். நன்கு தகுதி பெற்றிருப்பதைத் தவிர, அவர்கள் கற்பித்தல் மற்றும் வழிகாட்டுதலின் உயர் தரத்தை நிலைநிறுத்துவதற்காக, தொடர்ச்சியான தொழில்முறை வளர்ச்சியில் ஈடுபடுகிறார்கள். தொடர்ந்து கற்றல் மற்றும் ஒத்துழைப்பு கலாச்சாரத்தை வளர்க்கும் வகையில், சர்வதேச மாநாடுகளுக்கு செல்லவும் மற்றும் அங்கு கட்டுரைகளை வழங்கவும் அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய முன்னாள் மாணவர்கள் குறித்து, ஒய். எம். சி. ஏ. சென்னை பெருமிதம் கொள்கிறது. தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஷீலா ஸ்டீபன் மற்றும் ஐ. பி. எஸ் அதிகாரியான ஆணையர் வால்டர் தேவராம் ஆகியோர் குறிப்பிடத்தக்க முன்னாள் மாணவர்களில் அடங்குவர். முன்னாள் மாணவர்கள் பெரும்பாலும் "முன்னாள் மாணவர்கள் சந்திப்பு" நிகழ்வுகளில் பங்கேற்கிறார்கள். அப்போது, அவர்கள் பசுமையான பிடித்த நினைவலைகளை அசைபோட்டு நினைவுகூர்கிறார்கள். மேலும், தங்கள் முன்னாள் விடுதிக்குச் சென்று, இளமைக்கால அனுபவங்களை பகிர்ந்து, சக பட்டதாரிகளுடன் மீண்டும் இணைகிறார்கள்.

**"அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை ஒரு கடமையாக மட்டுமல்லாமல், திறனைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு வழிமுறையாகவும் பார்க்கலாம்!"**

பார்வையற்ற மற்றும் அறிவு சார்ந்த ஊனமுற்ற குழந்தைகளுக்கான விளையாட்டு நடவடிக்கைகளை புதுமைப்படுத்துவதன் மூலம், உள்ளடக்கிய கல்வியில் ஒய். எம். சி. ஏ. சிறந்து விளங்குகிறது. ஒரே மைதானத்தில் விளையாடப்படும் கைப்பந்து போன்ற விளையாட்டுகளின் தழுவிய மாறுபாடுகளை உருவாக்குவதில் இந்த நிறுவனம் முன்னோடியாக உள்ளது. உதாரணமாக, வலைப்பந்து (டென்னிஸ்) மைதானத்தில், கைப்பந்து (வாலிபால்) விளையாட ஒரு அண்டர்-நெட் வசதி உள்ளது. அதைப் போலவே, மேஜை வலைப் பந்து (டேபிள் டென்னிஸ்) மற்றும் ராட்டில்-பால் ஆகியவற்றிலும் ஒத்த தழுவல்களை உருவாக்கி உள்ளது. 2006 ஆம் ஆண்டில், அறிவுசார் குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கான ஒரு பள்ளி நிறுவப்பட்டது, ஆரம்பத்தில், அதில் 25 மாணவர்கள் சேர்ந்தனர். இதனால், மன இறுக்கம் கொண்ட குழந்தைகள் மீது உடற்கல்வியின் தாக்கத்தை ஆய்வு செய்வதிலும் செயல்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகள் கிடைத்துள்ளன.

**"விடாமுயற்சி மற்றும் படைப்பாற்றலுடன் சவால்களை எதிர்கொள்வது"**

இந்த பெரிய அளவிலான நிறுவனத்தை நடத்துவது என்பது அதற்கே உரிய சவால்களுடன் வருகிறது. பல குடும்பங்களின் நிதி பின்னணி மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, நிதி போராட்டங்கள் மற்றும் ஊக்குவிப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதில், இந்த நிறுவனம் கூர்மையாக கவனம் செலுத்துகிறது. மாணவர் உதவித்தொகை, நலத் திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எளிதாக்குவதன் மூலமும், சலுகை விலையில் படிப்புகளை வழங்குவதன் மூலமும் அது சாத்தியமாகிறது.

விரிவான வளாகத்தை பராமரிப்பது முதல் ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் நடத்தை மற்றும் தேவைகளை நிர்வகிப்பது வரை அன்றாட




தடைகளை முதல்வர் டாக்டர் பிரேம்குமார் முன்னிலைப்படுத்துகிறார். இந்த சவால்கள் இருந்தபோதிலும், ஒழுக்கத்தை நிலைநிறுத்துவதற்கும் மாணவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கும் இக் கல்லூரி பல உத்திகளை செயல்படுத்தியுள்ளது. குறிப்பாக, உடற்கல்வியில் ஒழுக்கத்தின் முக்கியத்துவம், ஒரு சீரான "வெகுமதி மற்றும் தண்டனை" அணுகுமுறையின் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

**"உங்கள் ஆர்வமும் கனவுகளும் உயரட்டும்!"**

பல சவால்கள் இருந்தபோதிலும், சென்னை ஒய். எம். சி. ஏ. உடற்கல்வி பயிலகம், தனது விளையாட்டு வசதிகளை விரிவுபடுத்துவதில் தொடர்ந்து உறுதியாக உள்ளது, ஸ்குவாஷ் விளையாட்டு மற்றும் ஃபுட்சல் கால் பந்து விளையாட்டு போன்ற புதிய பிரிவுகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. உடற்பயிற்சிக் கூடமும் அதிநவீன உபகரணங்களுடன் நவீனமயமாக்கப்பட்டு வருகிறது, இது, சிறந்த வசதிகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. உடற்பயிற்சிக் கூடத்தின் மேம்பாடுகள், சறுக்கு விளையாட்டு (ஸ்கேட்டிங்) வசதிகளைச் சேர்ப்பது மற்றும் கட்சிக்கு கூடத்துடன் கூடிய பல்நோக்கு மண்டபத்தை உருவாக்குவது ஆகியவை புதுப்பிப்புகளில் அடங்கும். இவை அனைத்தும் பயனுள்ள பராமரிப்பு மற்றும் உகந்த பயன்பாட்டை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டவை.

நடப்பு ஆண்டில், ஒலிம்பிக் பங்கேற்பின் நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, கல்வி ஆண்டிற்கான தொலைநோக்குப் பார்வை, பல திட்டங்களை கொண்டுள்ளது. அவற்றில், நிறுவனங்கள் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கான விளையாட்டுத் திட்டங்கள், நிறுவனருக்கான நினைவு முத்திரை, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களுக்கான போட்டி மற்றும் திருநங்கைகளுக்கான விளையாட்டு நடவடிக்கைகள் போன்ற முன்முயற்சிகள் அடங்கும்.

**"உண்மையான மாற்றம் புரட்சிகரமானது. மேலும், கனவுகளை நனவாக்க விடாமுயற்சியும், உறுதியான நிலைப்பாடும் தேவை".**

ஒய். எம். சி. ஏ. சென்னை உடற்கல்வியின் தீவிர மாற்றத்தை உருவாக்கும் சக்திக்கு, சான்றாக நிற்கிறது. தற்போதைய காலங்களில் உடற்பயிற்சி மற்றும் உடற்கல்வியின் முக்கியத்துவம் பரவலாக அங்கீகரிக்கப்பட்டாலும், இந்த விழிப்புணர்வு இல்லாத காலத்தில், இந்த விஷயத்தில் இந்த கல்லூரியின் சிறப்பு கவனம், புரட்சிகரமாக இருந்தது. இக் கல்லூரியின் அர்ப்பணிப்பு தொடர்ந்து சிறந்து விளங்குதல், எல்லா தரப்பினரையும் உள்ளடக்கிய நோக்கம் மற்றும் புதுமைகளை புகுத்துதல் ஆகியவற்றில் உள்ளது. இது, உடற்கல்வி மற்றும் விளையாட்டுகளில் ஒரு தலைசிறந்த நிறுவனமாய் இருப்பதை உறுதி செய்கிறது.
ஒய். எம். சி. ஏ. உடற்கல்வி கல்லூரிக்கான 'சென்னை சாம்பியன்ஸ்' விருது, உடற்கல்வியில் குறிப்பிடத்தக்க பாரம்பரியம் மற்றும் நீடித்த தாக்கம் மற்றும் இளம் திறமைகளை வளர்ப்பதில் அதன் பங்கிற்கு பொருத்தமான அங்கீகாரமாகும். வளமான வரலாறு மற்றும் சிறப்பு நிலைக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பு ஆகியவை இந்த நிறுவனத்தை, கவுரவத்திற்கு தகுதியான வேட்பாளராக ஆக்குகின்றன.

சொ. வி நாயகமூர்த்தி